**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

**OS No.99/2016**

முன்னிலை – எஸ். கோபிநாதன், பி.எஸ்சி.பி.எல்.,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08 ஆம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணன் | தந்தை பெயர் | : | இளையபெருமாள் |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 08.08.2025

**P.W. : 1**

**1–வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

| | |
|---|---|
| கேள்வி | இந்து கூட்டுகுடும்பம் என்றால் அதற்கு தனியாக வங்கி கணக்கு இருக்க வேண்டும் என்றால்? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | இந்து கூட்டு குடும்பம் என்பது வருமான வரி கணக்கு தாக்கல் செய்வதில் அந்த வரம்புக்குள் வந்துவிடுமா என்றால்? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | இந்து கூட்டு குடும்பம் என்பதற்கு ஒரு வங்கி கணக்கு வேண்டும் என்றாலும், வருமான வரி கணக்கில் அதற்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றாலும், அதனை தெரிந்து கொண்டு வழக்கிற்காக மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால்? |
| பதில் | சரியல்ல. |

MADURAI BENCH OF MADRAS HIGH COURT, TRICHY

IIADUCOURT ARICHY

| | |
|---|---|
| கேள்வி | நான் தாக்கல் செய்துள்ள அடமான ஆவணத்தில் எனது தாயாரின் வாரிசு என்ற அடிப்படையில்தான் நான் கையெழுத்து செய்துள்ளேனா என்றால்? |
| பதில் | ஆமாம். |
| கேள்வி | அந்த ஆவணத்தில் கூட்டுகுடும்ப சொத்து என்று ஏதாவது சொல்லியுள்ளேனா என்றால்? |
| பதில் | சொல்லியுள்ளேன். |
| கேள்வி | என்னிடம் காட்டப்படும் ஆவணமான வா.சா.ஆ.5 ஆவணத்தில் இந்து கூட்டு குடும்பம் என்று சொல்லியுள்ளேனா என்றால்? |
| பதில் | அது தேவையில்லை. |
| கேள்வி | பூர்வீக சொத்து என்பதற்கும், இந்து கூட்டு குடும்ப சொத்து என்பதற்கும் வித்தியாசம் தெரியுமா என்றால்? |
| பதில் | தெரியாது. |
| கேள்வி | உங்களுடன் உடன் பிறந்த சகோதரிகள் எத்தனை பேர் என்றால்? |
| பதில் | 2 பேர். சகோதரர் ராஜராஜன் என்பவர் இறந்துவிட்டார். |
| கேள்வி | உங்கள் சகோதரிகள் தனித்தனியாகத்தான் வசித்து வருகிறார்கள் என்றால்? |
| பதில் | முன்பு ஒன்றாக இருந்தோம், தற்பொழுது தனித்தனியாக இருக்கிறார்கள். மேற்படி அடமான ஆவணம் ஏற்படுத்தப்பட்டபோது ஒன்றாகத்தான் இருந்தோம். |
| கேள்வி | உங்கள் சகோதரர் ராஜராஜன் எப்பொழுது இறந்துபோனார் என்றால்? |
| பதில் | 26.11.2015–ம் தேதி இறந்து போனார். |
| கேள்வி | உங்களது வழக்குரையில் மேற்படி பாரத் கேஸ் ஏஜென்சீஸ் என்ற தொழில் என்னுடைய உழைப்பும், எனது சகோதரிகளின் உழைப்பும் உள்ளது என்று சொல்லியுள்ளேனா என்றால்? |
| பதில் | சொல்லியுள்ளேன். |
| கேள்வி | நான் சொல்வதுபோல் அதில் சொல்லவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | எனது தந்தை காலத்தில் சொத்துக்கள் ஏதாவது விற்பனை செய்யப்பட்டுள்ளதா என்றால்? |
| பதில் | எனக்கு தெரிந்து இல்லை. |

| | |
|---|---|
| கேள்வி | அடமான ஆவணத்தின் மூல பத்திரத்தை தாக்கல் செய்துள்ளீர்களா? அசல் அல்லது சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளீர்களா? |
| பதில் | மூலபத்திரம் அடமானத்தில் உள்ளது, அதன் நகலை தாக்கல் செய்துள்ளேன். |
| கேள்வி | நான் சொல்வதுபோல் அதன் நகலை தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | இந்து கூட்டு குடும்பம் என்ற வாதுரையை நான் எடுக்கும் பட்சத்தில் யார் யார் இருந்தார்கள், யார் யாருக்கு என்னென்ன பொறுப்பு என்று சொல்லப்பட்டுள்ளதா? |
| பதில் | அது எனக்கு தெரியாது. |
| கேள்வி | மேற்படி இந்து கூட்டு குடும்பம் என்ற வாதுரையை நான் எடுக்கும் பட்சத்தில் அதன் சாராம்சங்களை நான் சொல்லாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | எனது சகோதரிகள் மற்றும் எனது தாயார் ஏதேனும் வேலைக்கு சென்றுள்ளார்களா என்றால்? |
| பதில் | எனது தாயார் செல்லவில்லை, ஆனால் எனது சகோதரிகள் சென்றுள்ளார்கள். |
| கேள்வி | அவ்வாறு என்ன வேலைக்கு சகோதரிகள் சென்றார்கள் என்றால்? |
| பதில் | 2 சகோதரிகள் தனியார் பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்து வந்தார்கள். |
| கேள்வி | தற்பொழுதும் பணிபுரிந்து வருகிறார்களா என்றால்? |
| பதில் | திலகவதி என்ற சகோதரி மட்டும் தற்பொழுது வரை பணிபுரிந்து வருகிறார். மற்றொரு சகோதரி மீனாட்சி வெளிநாட்டில் இருக்கிறார். |
| கேள்வி | திலகவதி என்ற சகோதரி அரசு பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்து வருகிறாரா என்றால்? |
| பதில் | வார்டனராக பணிபுரிந்து வருகிறார். |
| கேள்வி | உங்களுக்கு உங்கள் தந்தை என்னென்ன சொத்துக்கள் வாங்கினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால்? |
| பதில் | தெரியும். |
| கேள்வி | உங்கள் தந்தையின் சொத்துக்கள் அசல் ஆவணங்கள் அனைத்தும் எனது கைவசம் உள்ளதா என்றால்? |
| பதில் | ஆமாம். |
| கேள்வி | மேற்படி ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா |

IIADVOCATEBHARATHY

| | |
|---|---|
| | என்றால்? |
| பதில் | வங்கியில் அடமானத்தில் அந்த ஆவணங்கள் உள்ளது. |
| கேள்வி | அந்த ஆவணங்களின் நகலையாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால்? |
| பதில் | முடியும். |
| கேள்வி | உங்கள் தந்தை வாங்கிய சொத்துக்கள் அனைத்தும் அவருடைய சுயசம்பாத்தியத்தின் அடிப்படையில் வாங்கப்பட்டது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | உங்கள் அப்பா காலத்திற்கு முன்பிலிருந்தே இந்து கூட்டு குடும்பமாகத்தான் இருக்கிறோம் என்று வாதுரை செய்கிறேனா என்றால்? |
| பதில் | ஆமாம். |
| கேள்வி | உண்மையிலேயே உங்கள் அப்பா காலத்திற்கு முன்பிலிருந்தே இந்து கூட்டு குடும்பமாகத்தான் இருக்கிறோம் என்று நாங்கள் சொன்னதற்கு எனது தந்தையின் பெயரில் உள்ள ஆவணங்கள் அனைத்தையும் நான் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | உங்கள் காலத்திலோ, உங்கள் தந்தை காலத்திலோ இந்து கூட்டு குடும்பம் பாத்தியத்திற்குண்டான சாராம்சங்களை எனது வழக்குரையில் சொல்லப்படாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | 1–வது பிரதிவாதி பிருந்தாவின் கணவர் ராஜராஜன் நடத்தி வந்த நிறுவனத்தில் எத்தனை பேர் வேலை செய்தார்கள் என்றால்? |
| பதில் | 12 பேர் வேலை செய்தார்கள். |
| கேள்வி | மேற்படி நிறுவனத்தில் எத்தனை வாடிக்கையாளர்கள் இருந்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால்? |
| பதில் | 2000 பேர் இருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். |
| கேள்வி | எனது தந்தையின் பெயரில் எத்தனை சொத்துக்கள் உள்ளது என்றால்? |
| பதில் | ஒரே ஒரு இடம்தான் உள்ளது. அது வங்கியில் அடமானம் வைக்கப்பட்ட வீடு மட்டும்தான். மற்றவை அனைத்தும் பூர்வீக சொத்து ஆகும். |
| கேள்வி | பூர்வீக சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சொத்துகளுக்கு எனது வாதுரையில் எடுக்கப்பட்ட கட்சியான இந்து கூட்டு குடும்ப சொத்து என்பது பொருந்தாது என்றால் சரியா? |

| | |
|---|---|
| பதில் | ஒன்றாக இருந்ததால் நாங்கள் கூட்டு குடும்பம் என்று சொல்கிறோம். மற்றபடி எனக்கு வேறெதுவும் தெரியாது. |
| கேள்வி | ஆரம்பத்தில் மேற்படி பாரத் கேஸ் ஏஜென்சீஸ் உரிமமானது எனது சகோதரரர் ராஜராஜன் பெயரில் மட்டும்தான் இருந்ததா என்றால்? |
| பதில் | ஒருவர் பெயரில் மட்டும்தான் உரிமம் கொடுப்பார்கள் என்பதால் எனது சகோதரர் பெயரில் மட்டும் இருந்தது. |
| கேள்வி | ராஜராஜன் அவரது பெயரில் தாக்கல் செய்த நிறுவனத்தின் உரிமம் தொடர்பான ஆவணங்களில் மேற்படி சொத்தானது இந்து கூட்டு குடும்ப சொத்து என்று கூறுகிறேனா என்றால்? |
| பதில் | சொத்து எங்கள் நான்கு பெயர்களில்தான் இருந்தது. |
| கேள்வி | ஒருவருக்கு மட்டும்தான் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவன உரிமம் கொடுப்பார்கள் என்று வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | இந்து கூட்டு குடும்பம் நிறுவனத்தை கூட்டு குடும்ப பெயரிலேயே உரிமம் வாங்க முடியும் என்று சொன்னால்? |
| பதில் | இல்லை, வாங்க முடியாது. |
| கேள்வி | வழக்கில் உள்ள சொத்து விவரங்கள் எனக்கு தெரியுமா? |
| பதில் | தெரியும். |
| கேள்வி | மேற்படி தாவா சொத்துக்கள் அனைத்தும் விவசாய சொத்துக்களா? |
| பதில் | ஆமாம். |
| கேள்வி | தாவா சொத்தில் அனைத்தும் விவசாயம் நடந்து கொண்டிருக்கிறதா என்றால்? |
| பதில் | எனது அப்பா இருந்தவரை விவசாயம் நடந்தது. |
| கேள்வி | உங்களது அப்பா எப்பொழுது இறந்தார் என்றால்? |
| பதில் | 2012-ம் வருடம் இறந்து போனார். |
| கேள்வி | வெளியில் கடன் வாங்கியதான நான் வழக்குரையில் சொல்லியுள்ளவாறு எவ்வளவு கடன் வாங்கியுள்ளேன் என்றால்? |
| பதில் | ரூ.1,10,00,000/- (ரூபாய் ஒரு கோடி பத்து லட்சம் மட்டும்) வாங்கியுள்ளோம். நான் மட்டும் வாங்கவில்லை. எனது சகோதரிகள் மற்றும் ராஜராஜன் ஆகியோரும் வாங்கினார்கள். |
| கேள்வி | மேற்படி கடன் தொகையை அடைத்துவிட்டோமா என்றால்? |
| பதில் | இல்லை, தற்பொழுது வரை நிலுவையில் உள்ளது. |
| கேள்வி | யாரிடமிருந்து கடன் வாங்கப்பட்டது என்ற விபரத்தை பிராதில் |

MADRAS HIGH COURT

MADURAI BENCH OF MADRAS HIGH COURT, MADURAI

| | |
|---|---|
| | சொல்லியுள்ளீர்களா? |
| பதில் | சொல்லியுள்ளேன். |
| கேள்வி | நான் சொல்வதுபோல் பிராதில் அவ்வாறு சங்கதிகள் இல்லை என்றாலும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | நீங்கள் அரசு ஊழியர் என்பதால் கடன் வாங்கியது சம்பந்தமாக உங்கள் உயர் அதிகாரிகளுக்கு தகவல் சொன்னீர்களா? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | ராஜராஜன் பெயரில் வங்கி கணக்கு ஏதேனும் உள்ளதா? |
| பதில் | உள்ளது. |
| கேள்வி | இந்து குடும்ப சொத்து என்பதால் குடும்ப வருமானத்திலிருந்து உருவாக்கப்பட்ட தொழில் என்பதால் மேற்படி தொழிலை கலைக்க கோரியும், கணக்குகள் கேட்டும் உரிய பரிகாரம் கேட்காததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | நிறுவனத்தில் உள்ள அனைத்து பொருட்களுக்கும் உண்டான ஆவணங்கள் ராஜராஜன் பெயரில்தான் இருந்தது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணங்களில் உண்மையிலேயே இந்து கூட்டு குடும்பம் என்று இருந்தால் அந்த வாசகங்களை காண்பித்திருப்பீர்கள் என்றால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | எனது சகோதரி எப்பொழுது வெளிநாடு சென்றார்? |
| பதில் | சென்ற 2024–ம் வருடம் சென்றார். |
| கேள்வி | மற்ற சகோதரிகளையும் அழைத்து விசாரித்தால்தான் இந்து கூட்டு குடும்பம் என்பது பற்றி உண்மை தெரியவரும் என்றால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும், இந்த வழக்கு நிறுவனத்தை பொறுத்தவரை 1–வது பிரதிவாதிக்கு மட்டுமே உரிமை உள்ளது என்றாலும்? |
| பதில் | சரியல்ல. |

**<u>மறுவிசாரணை.</u>** இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 08.08.2025 என் முன்பு கையெழுத்து செய்தார்.

S/d.Thiru.S.Gopinathan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 08.08.2025

DJ COURT, TRICHY